உ


திருச்சிற்றம்பலம்



குனித்த புருவமுங் கொவ்வைச் செவ்வாயிற்
குமிண் சிரிப்பும்
பனித்த சடையும் பவளம்போல் மேனியிற்
பால்வெண்ணீறும்
இனித்தமுடைய எடுத்தபொற் பாதமுங்
காணப்பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவதே இந்த
மாநிலத்தே

# அஞ்சலி

சிவமயம்



## சுலோகம்

சந்த் ரார்த்த சூடம் சசிவர்ண தேகம்
பணமணேர்ப் பூஷண பூஷிதாங்கம்
பாலாம்பிகாயா: பதிம்அக்நி நேத்ரம்
நமாமி வைத்யேசமகம் மகேசம்.

## சிவலிங்க அஷ்டகம்

1 *பிரம்ம முராரி சுரார்ச்சித லிங்கம்*
*நிர்மல பாஸித சோபித லிங்கம்*
*ஜன்ம ஜ துக்க விநாசக லிங்கம்*
*தத்பிரண மாமி சதாசிவ லிங்கம்.*

2 *தேவமுனிப் பிரவரார்ச்சித லிங்கம்*
*காமதகம் கருணாகர லிங்கம்*
*ராவண தர்ப்ப விநாசந லிங்கம்*
*தத்பிரணமாமி சதாசிவ லிங்கம்.*

3 *ஸர்வ சுகந்தி சுலேபித லிங்கம்*
*புத்தி விவர்த்தன காரண லிங்கம்*
*ஸித்த சுராசுர வந்தித லிங்கம்*
*தத்பிரணமாமி சதாசிவ லிங்கம்.*

4 கனக மகாமணி பூஷித லிங்கம்
பணிபதி வேஷ்டன சோபித லிங்கம்
தக்ஷஸு யச்ஞ விநாசந லிங்கம்
தத்பிரணமாமி சதாசிவ லிங்கம்.

5 குங்கும சந்தன லேபித லிங்கம்
பங்கஜ ஹார சுசோபித லிங்கம்
சம்சித பாப விநாசக லிங்கம்
தத்பிரணமாமி சதாசிவ லிங்கம்

6 தேவ கணார்ச்சித சேவித லிங்கம்
பாவைர் பக்திபி ரேவசக லிங்கம்
தினகர கோடி பிரபாகர லிங்கம்
தத்பிரணமாமி சதாசிவ லிங்கம்

7 அஷ்ட தளோபரி வேஷ்டித லிங்கம்
சர்வ சமுத்பவ காரண லிங்கம்
அஷ்ட தரித்ர விநாசந லிங்கம்
தத்பிரணமாமி சதாசிவ லிங்கம்.

8 சுரகுரு சுரவர பூஜித லிங்கம்
சுரவன புஷ்ப சதார்சித லிங்கம்
பராத்பரம் பர மாத்மக லிங்கம்
தத்பிரணமாமி சதாசிவ லிங்கம்.



சிதம்பரம் போகாமலிருப்பேனோ நான்'
என்ற இசையில் படிக்க வேண்டும்.

ஓம் முருக

## ''ஸாம்பசிவ அக்ஷரமாலிகை''

ஸாம்பஸதாசிவ ஸாம்பஸதாசிவ
ஸாம்பஸதாசிவ ஸாம்பசிவ

1 அத்புத விக்கிரஹ அமராதீசுவர
அகணித குணகண சாம்பசிவ

2 ஆனந்தாமிருத ஆசிரிதரட்சக
ஆத்மானந்த மகேச சிவ

3 இந்துகலாதர இந்திராதிப்பிரிய
சுந்தரரூப சுரேசசிவ

4 ஈசசுரேச மஹேச ஜனப்பிரிய
கேசவசேவித கீர்த்திசிவ

5 உரகாதிப்பிரிய உரகவிபூஷண
நரகவிநாச நடேசசிவ

6 ஊர்ஜிததானவ நாசபராத்பர
ஆர்சித பாபவிநாசசிவ

7 ருர்வேத சுருதி மௌளிவிபூஷண
ரவிசந்திராக்நி திரிநேத்திரசிவ

8 ரூபதிமித்திர பிரபஞ்ச விலக்ஷண
தாபநிவாரண தத்துவசிவ'

9 லிங்கசுவரூப சர்வபுதப்பிரிய
மங்களமூர்த்தி மஹேசசிவ

10 லூதாதீசுவர ரூபப்பிரியசிவ
வேதாந்தப்பிரிய வேத்தியசிவ

11 ஏகாநேக ஸ்வரூப விசுவேசுவர
யோகிஹிருதிப்பிரிய வாஸசிவ



12 ஐசுவர்யாச்சிரய சின்மய சித்கன
அச்யுதானந்த மஹேசசிவ

13 ஓங்காரப்பிரிய உரகவிபூஷண
ஹ்ரீங்காராதி நடேசசிவ

14 ஔரஸலாலித அந்தகநாசன
கௌரீச மேதகிரீசசிவ

15 அம்பரவாஸ சிதம்பரநாயக
தும்புருநாரதஸேவ்யசிவ

16 அஃகாரார்த ஸமானகுணாதிக
கைலாசேசுவர சர்வசிவ

1 கமலாபூஜித கைலாஸப்பிரிய
கருணாஸாகர சாந்தசிவ

2 கட்கசூல மிருக டக்காத்யாயுத
விக்கிரமரூப விசுவேசசிவ

3 கங்காதரகிரி தநுஜா வல்லப
குணஹித சங்கரசர்வசிவ

4 காதகபஞ்சன பாதகநாசன
கௌரீசமேத கிரீசசிவ

5 சண்டவிநாசன ஸகலஜனப்பிரிய
மண்டலாதீச மஹேசசிவ

6 சந்திரகிரீடஸு குண்டலபூஷித
புத்திரப்பிரிய புவனேசசிவ

7 ஜனனஜராமிருதி கல்மஷநாசந
விரஹிததாப விநாசசிவ

8 சங்காரப்பிரிய பிருங்கிரிடப்பிரிய
ஓங்காரேச மஹேசசிவ

9 ஞானிபிராச்சித ஞானபலப்பிரத
தீனஜனப்பிரிய தீப்தசிவ

செந்தமிழ் நாடென்னும் போதினிலே-என்ற
இசையில் படிக்கவேண்டும்.

10 டங்காத்ய யுத தாரணஸந்துவர
ஹ்ரீங்காராதி ஸுரேசசிவ

11 டங்கஸ்வரூப ஸஹகாரோத்தம
வாகீசுவர வரதேசசிவ

12 டம்பவிநாசன டிண்டிமபூஷண
அம்பரவாஸ சிதேசசிவ

13 டம்டம்டமருக தரணீநர்தன
டுண்டி விநாயகஸேவ்யசிவ

14 தத்துவமஸீதி வசனஸ்வரூபக
நித்தியானந்த மஹேசசிவ

15 ஸ்தாவர ஜங்கம புவனவிலக்ஷண
பாவுகமுனிவர ஸேவ்யசிவ

16 துக்கவிநாசந தளிதமனோபவ
சந்தன லேபித காத்திரசிவ

17 தாணீதரசுப தவளித பாஸ்வர
தனதாதிப்பிரிய தானசிவ

18 நாநாமணிகண பூஷணநிர்குண
நடன ஜனப்பிரிய நாட்யசிவ

19 பன்னகபூஷண பார்வதீநாயக
பரமானந்த பரேசசிவ

20 பாலவிலோசன பானுகோடிப்பிரப
ஹாலாஹல தரஅமிருதசிவ

21 பந்தவிநாசன பிரகதீசாமர
ஸ்கந்தாதிப்பிரிய கனகசிவ

22 பஸ்ம விலேபனபவபய நாசன
விஸ்மயரூப விசுவேசசிவ

23 மன்மதநாசன மதுபானப்பிரிய
மந்தரபர்வத வாஸசிவ

24 யதிஜனஹிருதய நிவாஸிதஈசுவர
விதிவிஷ்ணுவாதி ஸுரேசசிவ

25 ராமேசுவரவர ரமணீயாம்புஜ
ஸோமேசேசுவர ஸுகிருதசிவ

26 லங்காதீசுவர ஸுரகணஸேவித
லாவண்யாமிருதலஸிதசிவ

27 வரதாபயகர வாஸுகிபூஷண
வனமாலாதி விபூஷசிவ

28 சாந்திசுவரூப ஜகத்திரய சின்மய
காந்திமதிப்பிரிய கனகசிவ

29 ஷண்முகஜனக ஸுரேந்திரமுனிப்பிரிய
ஷாட்குண்யாதி ஸமேதசிவ

30 ஸம்ஸாரார்ணவநாசன சாசுவத
ஸாது ஹிருதிப்பிரிய வாஸசிவ

31 ஹரபுருஷோத்தம அத்துவைதாமிருத
பூர்ண சிரியப்பதி ஸேவ்யசிவ

32 லாளிதபக்த ஜனேச நிஜேசுவர
காளிநடப் பிரியகாமசிவ

33 க்ஷரரூபாதி பிரியான்விசுந்தர
ஸாக்ஷி ஜகத்திரய சுவாமிசிவ

ஸாம்ப ஸதாசிவ ஸாம்ப ஸதாசிவ
ஸாம்பஸதாசிவ ஸாம்பசிவ



ஓம் முருக

## "ஷடக்ஷர பீஜஷ்டகம்"

சரவணபவமாத்யம் சங்கரோமாதநூஜம்
சரவிநிஹதசூரம் சக்திநிஸ்திரிம்சஹஸ்தம்
சரணமுபகதாநாம் சர்மதாதாரமாராத்
சசிநிபமுகஷட்கம் ஷண்முகம்தம் நமாமி

ரதிபதிநிபகாத்திரம் ரக்தராஜீவநேத்திரம்
ரசிதபுவனரக்ஷம் ராக்ஷஸாநீகசிக்ஷம்
ரவிசதஸமகாந்தம் ராகிஞமத்தியகம்மியம்
ரமிதவிபுதலோகம் ஷண்முகம்தம்நமாமி

வனஜபவமுகாநாம் வாஞ்சிதார்த்தப்பிரதம்தம்
வலிதபலிதரோகான் வாசுஸம்மார்ஜயந்தம்
வரதமகிலரக்ஷம் வாரணரோஹதக்ஷம்
வடுகமபிமஹாந்தம் ஷண்முகம்தம்நமாமி

நதஜநபரிபாலம் நாகிலோகைகபாலம்
நரகநிரயபாதா லுப்பகம்வன்ஹிஜாதம்
நயனயுகளவீக்ஷா பீக்ஷணாதத்தார்த்திபங்கம்
நரவரமுனிவந்தியம் ஷண்முகம்தம்நமாமி

பவஸுதமனவத்தியம் பாவநாகம்மியமேகம்
பவஜலதிஸுபோதம் பக்திமார்கைககம்மியம்
பணிதநிகமதத்துவம் பர்த்ஸிதாசேஷதைத்தியம்
பணிதவிமலதேகம் ஷண்முகம்தம்நமாமி

வனபுவிவிசரந்தம் வக்திரஷட்கைர்லஸந்தம்
வநபகுலஜவல்லீ வாக்பிருன்மாதபாஜம்
வரவிதரணதக்ஷம் வாஹிநீசம்துவமேயம்
வரசிகரிநிவாஸம் ஷண்முகம்தம்நமாமி

### பலசுருதீ

ஸுரதருநிபமேதத் ஸ்தோத்திரத்நம்து குஹ்யம்
ஸகிருதபி படிதம்சேத் ஸர்வகாமான்ததாதி
இஹஜநுஷிவிசுத்தம் ஞானமாரோக்கியமாயுர்
பவநிகடவிமோக்ஷம் ஸ்கந்தஸாயுஜ்யமந்தே

முருக

# திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் தேவாரம்

## கோயில்

திருச்சிற்றம்பலம்

பண்: குறிஞ்சி 1-ம் திருமுறை

செல்வ நெடுமாடம் சென்று சேண் ஓங்கிச்
செல்வ மதிதோயச் செல்வம் உயர்கின்ற
செல்வர் வாழ்தில்லைச் சிற்றம் பலமேய
செல்வன் கழலேத்தும் செல்வம் செல்வமே

# திருநாவுக்கரசு நாயனார் தேவாரம்

திருவிருத்தம் 4-ம் திருமுறை

படைக்கலமாக உன் நாமத் தெழுத் தஞ்சென்
நாவிற் கொண்டேன்,
இடைக்கலம் அல்லேன் எழு பிறப்பும் உனக்
காட்செய்கின்றேன்,
துடைக்கினும் போகேன் தொழுது வணங்கித்
தூ நீறணிந்துன்,
அடைக்கலங்கண்டாய் அணிதில்லைச்
சிற்றம்பலத்தரனே

# சுந்தரமூர்த்தி நாயனார் தேவாரம்

பண்: குறிஞ்சி 7-ம் திருமுறை

மடித்தாடும் அடிமைக்கண் அன்றியே
மனனே நீ வாழும் நாளும்
தடுத்தாட்டித் தருமனார் தமர் செக்கில்
இடும்போது தடுத்தாட்கொள்வான்
கடுத்தாடு கரதலத்தில் தமருகமும்
எரியகலும் கரியபாம்பும்
பிடித்தாடி புலியூர்ச் சிற் றம்பலத்தெம்
பெருமானைப் பெற்றாமன்றே

## மாணிக்கவாசக சுவாமிகள் திருவாசகம்

கோயிற்றிருப்பதிகம் 8-ம் திருமுறை

தந்ததுன் றன்னைக் கொண்டதென் றன்னைச்
சங்கரா யார்கொலோ சதுரர்
அந்தமொன் றில்லா ஆனந்தம் பெற்றேன்
யாது நீ பெற்றதொன் றென்பால்
சிந்தையே கோயில் கொண்டவெம் பெருமான்
திருப்பெருந் துறையுறை சிவனே
எந்தையே ஈசா உடலிடங் கொண்டாய்
யானிதற் கிலனொர்கைம் மாறே

## திருமாளிகைத் தேவர் திருவிசைப்பா

பண்: பஞ்சமம் 9-ம் திருமுறை

நீறணி பவளக் குன்றமே நின்ற
நெற்றிக்கண் ணுடையதோர் நெருப்பே
வேறணி புவன போகமே யோக
வெள்ளமே மேருவில் வீரா
ஆறணி சடையெம் அற்புதக் கூத்தா
அம் பொன் செய் அம்பலத்தரசே
ஏறணி கொடியெம் ஈசனே உன்னைத்
தொண்டனேன் இசையுமாறிசையே

## சேந்தனர் அருளிய திருப்பல்லாண்டு

பண்: பஞ்சமம் 9-ம் திருமுறை

பாலுக்குப் பாலகன் வேண்டி அழுதிடப்
பாற்கடல் ஈந்த பிரான்
மாலுக்குச் சக்கரம் அன்றருள் செய்தவன்
மன்னிய தில்லை தன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற சிற்றம்
பலமே யிடமாகப்
பாலித்து நட்டம் பயிலவல்லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே

## சேக்கிழார் அருளிய
## திருப்புராணம்

*12-ம் திருமுறை*

தெண்ணிலா மலர்ந்த வேணியாயுன்றன்
திருநடம் கும்பிடப் பெற்று
மண்ணிலே வந்த பிறவியே எனக்கு
வாலிதாம் இன்பமாமென்று
கண்ணிலானந்த அருவிநீர் சொரியக் கைம்மலர்
உச்சிமேற் குவித்துப்
பண்ணினல் நீடி அறிவரும் பதிகம் பாடினர்
பரவினர் பணிந்தார்

## அருணகிரிநாதர் அருளிய
## கதிர்காமத் திருப்புகழ்

தனதனன தான தனதனன தான
தனதனன தானத் தனதான

1. திருமகள் உலாவும் இரு புய முராரி
திருமருக நாமப் பெருமாள்காண்
ஜெகதலமும் வானும் மிகுதிபெறு பாடல்
தெரிதரு குமாரப் பெருமாள்காண்
மருவுமடி யார்கள் மனதில் விளையாடும்
மரகதம யூரப் பெருமாள்காண்
மணிதரளம் வீசி யணி அருவி சூழ
மருவுகதிர் காமப் பெருமாள்காண்
அருவரைகள் நீறு பட அசுரர் மாள
அமரர் பொருத வீரப் பெருமாள்காண்
அரவு பிறை வாரி விரவுசடை வேணி
அமலர் குரு நாதப் பெருமாள்காண்
இரு வினையி லாத தருவினை விடாத
இமையவர்கு லேசப் பெருமாள்காண்
இலகுசிலை வேடர் கொடியினதி பார
இருதனவி நோதப் பெருமாளே

தனன தான தானன தனன தான தானன
தனன தான தானன தனதான

2. அலகில் மாறு மாறுத கலதிபூத வேதாளி
அடைவில் ஞானி கோமாளி அறமீயா
அழிவு கோளி நாணுது புழுகுபூசி வாழ்மாதர்
அருளி லாத தோடோய மருளாகிப்
பலக லாக ராமேரு மலைக ராச லாவிசு
பருவ மேக மேதாரு வெனயாதும்
பரிவு றுத மாபாதர் வரிசை பாடி யோயாத
பரிசில் தேடி மாயாத படிபாராய்
இலகு வேலை நீள் வாடை எரிகொள் வேலை மாசூரில்
எறியும் வேலை மாறுத திறல் வீரா
இமய மாது பாகீர திநதி பால கா சாரல்
இறைவி கான மால் வேடர் சுதைபாகா
கலக வாரி போல்மோதி வடவை யாறு சூழ்சீத
கதிர காம மூதூரில் இளையோனே
கனக நாடு வீடாய கடவுள் யானை வாழ்வான
கருணை மேரு வேதேவர் பெருமாளே

தனத்தத் தனதான தானன
தனத்தத் தனதான தானன
தனத்தத் தனதான தானன தனதான

3. உடுக்கத் துகில்வேணு நீள்பசி
அவிக்கக் கனபானம் வேணுநல்
ஒளிக்குப் புனலாடை வேணுமெய் உறுநோயை
ஒழிக்கப் பரிகார வேணுமுள்
இருக்கச் சிறு நாரி வேணுமொர்
படுக்கத் தனி வீடு வேணுமிவ் வகையாவும்
கிடைத்துக் கிருகவாசி யாகிய
மயக்கக் கடலாடி நீடிய
கிளைக்குப் பரிபால ஞயுயிர் அவமேபோம்

கருப்பைச்சித் தமுஞான போதமும்
அழைத்துத் தரவேணு மூழ்பல
கிரிக்கட் சுழல்வேனை யாளுவ தொருநாளே
குடக்குச் சிலதூதர் தேடுக
வடக்குச் சிலதூதர் நாடுக
குணக்குச் சிலதூதர் தேடுக எனமேவிக்
குறிப்பிற் குறிகாணு மாருதி
இனித்தெற் கொருதூது போவது
குறிப்பிற் குறிபோன போதிலும் வரலாமோ
அடிக்குத் திரகார ராகிய
அரக்கர்க் கிளையாத தீரனும்
அலைக்கப் புறமேவி மாதுறு வனமே சென்
றருட்பொற் றிருவாழி மோதிரம்
அளித்துற் றவர்மேல் மனோகரம்
அளித்துக் கதிர்காம மேவிய பெருமாளே.

தன்ன தான தத்த தனதான

4. எதிரி லாத பத்தி தனைமேவி
இனிய தாள் நினைப்பை இருபோதும்
இதய வாரி திக்குள் உறவாகி
எனது ளேசி றக்க அருள்வாயே
கதிர காம வெற்பில் உறைவோனே
கனக மேரு வொத்த புயவீரா
மதுர வாணி யுற்ற கழலோனே
வழுதி கூனி மிர்த்த பெருமாளே

தனதன தனதன தனதன தனதன
தானத் தனந்தத் தனதான

5 கடகட கருவிகள் தபலகி ரதிர்கதிர்
காமத் தரங்கம் மலைவீரா
கனகத நககுலி புணரித குணைகுக
காமத் தனஞ்சம் புயனோடே
வடசிக ரகிரித விடுபட நடமிடு
மாவிற் புகுங்கந் தவழாது

வழிவழி தமரென வெழிபடு கிலனென
வாவிக்கி னம்பொன் றிடுமோதான்
அடவியி ருடியபி நவகும ரியடிமை
யாயப் புனஞ்சென் றயர்வோனே
அயிலவ சமுடன ததிகிரி தருகவி
யாளப்புயங்கொண் டருள்வோனே
இடமொரு மரகத மயில்மிசை வடிவுள
ஏழைக் கிடங்கண் டவர்வாழ்வே
இதமொழி பகரினும் மதமொழி பகரினும்
ஏழைக் கிரங்கும் பெருமாளே.

தனதன்ன தானத்த தனதன்ன தானத்த
தனதன்ன தானத்த தனதான தானன

6 சமரமுக வேலொத்த விழிபுரள வாரிட்ட
தனமசைய வீதிக்குள் மயில்போ லுலாவியே
சரியை கிரியை போகத்தின் வழிவருக்கு பாசுத்தர்
தமையுணர ராகத்தின் வசமாக மேவியே
உமதடியு ளுநக்கு மனுமரண மாயைக்கு
முரியவர் மனாதத்தை யெனுமாய மாதரார்
ஒளிரமணி பீடத்தி லடுபடு வேனுக்கும்
உனதருள்க்ரு பாசித்தம் அருள்கூர வேணுமே
இமகிரிகு மாரத்தி யனுபவை பராசத்தி
எழுதரிய காயத்ரி உமையாள்கு மாரனே
எயினர்மட மானுக்கு மடலெழுதி மோகித்து
இதணருகு சேவிக்கு முருகா விசாகனே
அமரர்சிறை மீள்விக்க அமர்செய்பிர தாபிக்கும்
அதிகவித சாமர்த்ய கவிராஜ ராஜனே
அழுதுலகை வாழ்வித்த கவுணிய குலாதித்த
அரியகதிர் காமத்தில் உரியாபி ராமனே.

தனத்தா தனத்தா தனத்தா தனத்தா
தனத்தா தனத்தா தனதான.

7. சரத்தே யுதித்தா யுரத்தே குதித்தே
சமர்த்தா யெதிர்த்தே வருசூரைச்
சரிப்போன மட்டே விடுந்தா யடுத்தாய்
தகர்த்தா யுடற்றுன் இருகூறாச்
சிரத்தோ டுரத்தோ டறுத்தே குவித்தாய்
செகுத்தாய் பலத்தார் விருதாகச்
சிறைச்சே வல்பெற்றுய் வலக்கா ரமுற்றுய்
திருத்தா மரைத்தாள் அருள்வாயே
புரத்தார் வரத்தார் சரச்சே கரத்தார்
பொரத்தா னெதிர்த்தே வருபோது
பொறுத்தார் பரித்தார் சிரித்தார் எரித்தார்
பொரித்தார் நுதற்பார் வையிலேபின்
கரித்தோ லுரித்தார் விரித்தார் தரித்தார்
கருத்தார் மருத்தூர் மதனுரைக்
கரிக்கோ லமிட்டார் கணுக்கா னமுத்தே
கதிர்க்கா மமுற்றுர் முருகோனே.

தனதன தத்தனத் தனதன தத்தனத்
தனதன தத்தனத் தனதான.

8. சரியையா ளர்க்குமக் கிரியையா ளர்க்குநற்
சகலயோ கர்க்குமெட் டரிதாய
சமயபே தத்தினுக் கணுகொணு மெய்ப்பொருட்
டருபரா சத்தியிற் பரமான
துரியமே லற்புதப் பரமஞா னத்தனிச்
சுடர்வியா பித்தநற் பதிநீடு
துகளில்சா யுச்சியக் கதியையீ றற்றசொற்
சுகசொரு பத்தையுற் றடைவேனே
புரிசைசூழ் செய்ப்பதிக் குரியசா மர்த்யசற்
புருஷவீ ரத்துவிக் ரமசூரன்
புரளவேல் தொட்டகைக் குமரமேன் மைத்திருப்
புகழையோ தற்கெனக் கருள்வோனே
கரியயூ கத்திரட் பலவின்மீ திற்சுளைக்
கனிகள்பீ றிப்புசித் தமராட்டு

கதலிரூ தத்தினிற் பயிலுமீ ழத்தினிற்
கதிரகா மக்கிரிப் பெருமாளே.

தானதன தத்தத்த தானதன தத்தத்த
தானதன தத்தத்த தனதான

9 பாரவித முத்தப்ப டீரபுள கப்பொற்ப
யோதர நெருக்குற்ற இடையாலே
பாகளவு தித்தித்த கீதமொழி யிற்புட்ப
பாணவிழி யிற்பொத்தி விடுமாதர்
காரணிகு ழற்கற்றை மேல்மகர மொப்பித்த
காதின்முக வட்டத்தி லதிமோக
காமுகன கப்பட்ட ஆசையைம றப்பித்த
கால்களைம றக்கைக்கும் வருமோதான்
தேரிரவி யுதிப்பு காமுதுபு ரத்திற்றெ
சாசிரனை மர்த்தித்த அரிமாயன்
சீர்மருக அத்யுக்ர யானைபடும் ரத்நத்ரி
கோணசயி லத்துக்ர கதிர்காம
வீரபுன வெற்பிற்க லாபிவெயி லச்சிக்கு
மேகலையி டைக்கொத்தி னிருதாளின்
வேரிமழை யிற்பச்சை வயிலரு ணக்கற்றை
வேல்களில கப்பட்ட பெருமாளே.

தனதனா தத்த தனதனா தத்த
தனதனா தத்த தனதான.

10. மருவரு வெற்றி மலர்தொடா விற்கை
வலிசெயா நிற்கு மதனாலும்
மதில்களா லுற்ற கலைபடா வட்ட
மதிசுடா நிற்கு மதனாலும்
இருகணால் முத்த முதிரயா மத்தி
னிரவினில் நித்தம் மெலியாதே
இடருறு மெத்த மயல்கொளா நிற்கு
மிவளைவாழ் விக்க வரவேணும்
கரிகள்சேர் வெற்பி லரியவே டிச்சி
கலவிகூர் சித்ர மணிமார்பா

கனகமா ணிக்க வடிவனே மிக்க
கதிரகா மத்தில் உறைவோனே
முருகனே பத்த ரருகனே முத்தி
முதல்வனே பச்சை மயில்வீரா
முடுகியே விட்ட கொடியசூர் கெட்டு
முறியவேல் தொட்ட பெருமாளே.

தானதன தானத் தனதான.

11. மாதர்வச மாயுற் றுழல்வாரும்
மாதவமெ ணுமற் றிரிவாரும்
தீதகல வோதிப் பணியாரும்
தீநரக மீதிற் றிகழ்வாரே
நாதவெளி யேநற் குணசீலா
நாரியிரு வோரைப் புணர்வேலா
சோதிசிவ ஞானக் குமரேசா
தோமில்கதிர் காமப் பெருமாளே.

தன்ன தான தான தத்த தன்ன தான தான தத்த
தன்ன தான தான தத்த தனதான

12. முதிரு மார வார நட்போ
டிலகு மார வாரமெற்றி
முனியு மார வார முற்ற கடலாலே
முடிவி லாத தோர்வ டக்கி
லெரியு மால மார்பி டத்து
முழுகி யேறி மேலெறிக்கு நிலவாலே
வெதிரி லாயர் வாயில் வைத்து
மதுர ராக நீடி சைக்கும்
வினைவி டாத தாய ருக்கும் அழியாதே
வினையு மோக போக முற்றி
அளவி லாத காதல் பெற்ற
விகட மாதை நீய ணைக்க வரவேணும்
கதிர காம மாந கர்க்கு
ளெதிரி லாத வேல் தரித்த
கடவு ளேக லாய சித்திர மயில்வீரா

கயலு லாம்வி லோச னத்தி
களபமார்ப யோத ரத்தி
ககன மேவு வாளொ ருத்தி மணவாளா
அநிர வீசி யாடும் வெற்றி
விடையி லேறும் ஈசர் கந்த
அரிய ஞான வாச கத்தை அருள்வோனே
அகில லோக மீது சுற்றி
யசுரர் லோக நீறெ ழுப்பி
அமரர் லோகம் வாழ வைத்த பெருமாளே.

தனதனன தான தத்த தனதனன தானதத்த
தனதனன தான தத்த தனதான

13. வருபவர்க ளோலை கொண்டு
நமனுடைய தூத ரென்று
மடிபிடிய தாக நின்று தொடர்போது
மயலதுபொ லாதவம்பன்
விகுடைய னுகு மென்று
வசைகளுட னேதொடர்ந்து அடைவார்கள்
கருவியத னுலெ றிந்து
சதைகள்தனை யேய ரிந்து
கரியபுன லேசொ ரிந்து விடவேதான்
கழுமுனையி லேயி ரென்று
விடுமெனும வேளை கண்டு
கடுகிவர வேணு மெந்தன் முனமேதான்
பரகிரியு லாவு செந்தி
மலைனுயிட னேயிடும்பன்
பழநிதனி லேயிருந்த குமரேசா
பதிகள்பல வாயி ரங்கள்
மலைகள் வெகு கோடி நின்ற
பதமடியர் காண வந்த கதிர்காமா
அரவுபிறை பூளை தும்பை
விலுவமொடு தூர்வை கொன்றை
அணிவர்சடை யாளர் தந்த முருகோனே
அரகரசி வாய சம்பு
குருபரகு மார நம்பும்
அடியர் தமை யாள வந்த பெருமாளே.

# அருணகிரி நாதர் அருளிய கந்தரநுபூதி

## காப்பு

நெஞ்சக் கனகல்லு நெகிழ்ந் துருகத்
தஞ்சத் தருள்சண் முகனுக் கியல்சேர்
செஞ்சொற் புனைமாலை சிறந்திடவே
பஞ்சக் கரவானை பதம்பணிவாம்.

1 ஆடும்பரிவேல் அணிசே வலெனப்
பாடும் பணியே பணியா அருள்வாய்
தேடும் கயமா முகனைச் செருவில்
சாடும் தனியானை சகோதரனே.

2 உல்லாச நிராகுல யோகவிதச்
சல்லாப விநோதனும் நீயலையோ
எல்லாம் அறஎன்னை இழந்தநலம்
சொல்லாய் முருகா சுரபூ பதியே.

3 வானோ புனல்பார் கனல் மாருதமோ
ஞானோ தயமோ நவில்நான் மறையோ
யானோ மனமோ எனையாண்ட இடம்
தானோ பொருளா வதுசண் முகனே.

4 வளைபட்டகைம் மாதொடு மக்களெனும்
தளைபட்டழியத் தகுமோ தகுமோ
கிளைபட்டெழுசூர் உரமும் கிரியும்
தொளைபட்டுருவத் தொடுவேலவனே.

5 மகமாயை களைந்திட வல்லபிரான்
முகமாறும் மொழிந்தும் ஒழிந்திலனே
அகமாடை மடந்தையர் என்றயரும்
சகமாயையுள் நின்று தயங்குவதே.

6 திணியான மனோசிலை மீதுனதாள்
அணியார் அரவிந்தம் அரும்புமதோ
பணியா என வள்ளி பதம்பணியும்
தணியா அதிமோக தயாபரனே.

7 கெடுவாய் மனனே கதிகேள் கரவா
திடுவாய் வடிவேல் இறைதாள் நினைவாய்
சுடுவாய் நெடுவே தனைதூள்படவே
விடுவாய் விடுவாய் வினையாவையுமே.

8 அமரும் பதிகேள் அகமாமெனு மிப்
பிமரங் கெடமெய்ப் பொருள்பேசியவா
குமரன் கிரிராச குமாரி மகன்
சமரம் பொருதானவ நாசகனே.

9 மட்டூர் குழல் மங்கையர் மையல் வலைப்
பட்டூசல் படும் பரிசென் றொழிவேன்
தட்டூ டறவேல் சயிலத் தெறியும்
நிட்டூர நிராகுல நிர்ப்பயனே.

10 கார்மா மிசைகா லன்வரிற் கலபத்
தேர்மா மிசைவந் தெதிரப் படுவாய்
தார்மார்ப வலாரி தலாரி எனும்
சூர்மா மடியத் தொடுவேலவனே.

11 கூகா என என் கிளைகூடியழப்
போகா வகைமெய்ப் பொருள்பேசியவா
நாகாசல வேலவ நாலுகவித்
தியாகா சுரலோக சிகாமணியே.

12 செம்மான் மகளைத் திருடும் திருடன்
பெம்மான் முருகன் பிறவான் இறவான்
சும்மா இரு சொல்லற என்றலுமே
அம்மா பொருளொன்றும் அறிந்திலனே.

13 முருகன் தனிவேல் முனிநங் குருவென்
றருள்கொண் டறியார் அறியும் தரமோ
உருவன் றருவன் றுளதன் றிலதன்
றிருளன் றொளியன் றெனநின் றதுவே

14 கைவாய் கதிர்வேல் முருகன் கழல்பெற்
றுய்வாய் மனனே ஒழிவாய் ஒழிவாய்
மெய்வாய் விழிநாசி யொடும் செவியாம்
ஐவாய் வழிசெல்லும் அவாவினையே.

15 முருகன் குமரன் குக னென்றுமொழிந்
துருகுஞ் செயல்தந் துணர்வென்றருள்வாய்
பொருபுங்கவரும் புவியும் பரவும்
குருபுங்கவ எண்குண பஞ்சரனே.

16 பேராசையெனும் பிணியிற் பிணிபட்
டோராவினையேன் உழலத்தகுமோ
வீரா முதுசூர் படவேல் எறியும்
சூரா சுரலோக துரந்தரனே.

17 யாமோதிய கல்வியும் எம்மறிவும்
தாமேபெற வேலவர் தந்ததனாற்
பூமேல் மயல் போயற மெய்ப்புணர்வீர்
நாமேல் நடவீர் நடவீர் இனியே.

18 உதியா மரியா உணரா மறவா
விதிமால் அறியா விமலன் புதல்வா
அதிகா அநகா அபயா அமரா
பதிகாவல சூர பயங்கரனே.

19 வடிவும் தனமும் மனமும் குணமும்
குடியும் குலமும் குடிபோகியவா
அடியந் தமிலா அயில்வேல் அரசே
மிடியென் றொருபாவி வெளிப்படினே

20 அரிதாகிய மெய்ப்பொருளுக் கடியேன்
உரிதா உபதேசம் உணர்த்தியவா
விரிதாரண விக்கிரம வேளிமையோர்
புரிதாரக நாக புரந்தரனே

21 கருதா மறவா நெறிகாண எனக்
இருதாள் வனசம் தரஎன் றிசைவாய்
வரதா முருகா மயில்வாகனனே
விரதா சுரசூர விபாடணனே

22 காளைக் குமரேச னெனக் கருதித்
தாளைப் பணியத் தவமெய்தியவா
பாளைக் குழல் வள்ளி பதம்பணியும்
வேளைச் சுரபூபதி மேருவையே

23 அடியைக் குறியா தறியாமையினால்
முடியக் கெடவோ முறையோ முறையோ
வடிவிக் கிரமவேல் மகிபா குறமின்
கொடியைப் புணரும் குணபூதரனே

24 கூர்வேல் விழிமங்கையர் கொங்கையிலே
சேர்வே னருள் சேரவும் எண்ணுமதோ
சூர்வேரொடு குன்று தொளைத்த நெடும்
போர்வேல புரந்தர பூபதியே

25 மெய்யே எனவெவ் வினை வாழ்வை உகந்
தையோ அடியேன் அலையத் தகுமோ
கையோ அயிலோ கழலோ முழுதும்
செய்யோய் மயிலேறிய சேவகனே

26 ஆதாரம் இலேன் அருளைப்பெறவே
நீதான் ஒரு சற்றும் நினைந்திலையே
வேதாகம ஞான விநோத மனோ
தீதா சுரலோக சிகாமணியே

27 மின்னே நிகர்வாழ்வை விரும்பிய யான்
என்னே விதியின் பயன் இங்கிதுவோ
பொன்னே மணியே பொருளே அருளே
மன்னே மயிலேறிய வானவனே.

28 ஆனா அமுதே அயில்வேல் அரசே
ஞானா கரனே நவிலத் தகுமோ
யானாகிய என்னை விழுங்கி வெறும்
தானாய் நிலைநின்றது தற்பரமே.

29 இல்லேயெனு மாயையில் இட்டனைநீ
பொல்லேன் அறியாமை பொறுத்திலையே
மல்லேபுரி பன்னிருவாகு விலென்
சொல்லே புனையும் சுடர்வேலவனே.

30 செவ்வான் உருவில் திகழ்வேலவன்அன்று
ஒவ்வாததென உணர்வித்ததுதான்
அவ்வாறறிவார் அறிகின்றதலால்
எவ்வாறொருவர்க் கிசைவிப்பதுவே

31 பாழ்வாழ்வெனு மிப் படுமாயையிலே
வீழ்வாய் எனஎன்னை விதித்தனையே
தாழ்வானவை செய்தன தாமுளவோ
வாழ்வாய் இனிநீ மயில்வாகனனே.

32 கலையே பதறிக் கதறித் தலையூ
டலையே படுமா றதுவாய் விடவோ
கொலையே புரிவேடர் குலப்பிடிதோய்
மலையே மலைகூறிடு வாகையனே.

33 சிந்தாகுல இல்லொடு செல்வமெனும்
விந்தாடவி என்று விடப்பெறுவேன்
மந்தாகினி தந்த வரோதயனே
கந்தா முருகா கருணாகரனே

34 சிங்கார மடந்தையர் தீநெறிபோய்
மங்காமல் எனக்கு வரம் தருவாய்
சங்கிராம சிகாவல சண்முகனே
கங்கா நதி பால கிருபாகரனே.

35 விதிகாணும் உடம்பை விடாவினையேன்
கதிகாண மலர்க்கழல் என்றருள்வாய்
மதிவாணுதல் வள்ளியை யல்லதுபின்
துதியா விரதா சுரபூபதியே.

36 நாதா குமரா நமஎன் றரனார்
ஓதாய் என ஓதிய தெப்பொருள்தான்
வேதா முதல் விண்ணவர் சூடுமலர்ப்
பாதா குறமின் பதசேகரனே.

37 கிரிவாய் விடு விக்கிரமவேல் இறையோன்
பரிவாரம் எனும் பதம் மேவலையே
புரிவாய் மனனே பொறையாம் அறிவால்
அரிவாய் அடியோடும் அகந்தையையே.

38 ஆதாளியை ஒன்றறியேனை அறத்
தீதாளியை ஆண்டது செப்புமதோ
கூதாள கிராதகுலிக் கிறைவா
வேதாள கணம்புகழ் வேலவனே.

39 மாவேழ் சனனம்கெட மாயைவிடா
மூவேடணை யென்று முடிந்திடுமோ
கோவே குறமின் கொடிதோள்புணரும்
தேவே சிவசங்கர தேசிகனே

40 வினையோட விடும் கதிர்வேல் மறவேன்
மனையோடு தியங்கி மயங்கிடவோ
சுனையோடருவித் துறையோடு பசுந்
தினையோடிதணோடு திரிந்தவனே.

41 சாகாதெனையே சரணங்களிலே
காகா நமனர் கலகம் செயுநாள்
வாகா முருகா மயில் வாகனனே
யோகா சிவஞானோபதேசிகனே.

42 குறியைக் குறியாது குறித்தறியும்
நெறியைத் தனிவேலை நிகழ்த்திடலும்
செறிவற்றுலகோடுரை சிந்தையுமற்
றறிவற் றறியாமையு மற்றதுவே.

43 தூசா மணியும் துகிலும் புனைவாள்
நேசா முருகா நினதன் பருளால்
ஆசா நிகளம் துகளாயினபின்
பேசா அநுபூதி பிறந்ததுவே.

44 சாடும் தனிவேல் முருகன் சரணம்
சூடும்படிதந்தது சொல்லுமதோ
வீடும் சுரர்மாமுடி வேதமும் வெங்
காடும் புனமும் கமழும் கழலே.

45 கரவாகிய கல்வியுளார் கடைசென்
றிரவாவகை மெய்ப்பொருள் பேசியவா
குரவா குமரா குலிசாயுத குஞ்
சரவா சிவயோக தயாபரனே.

46 எந்தாயும் எனக்கருள் தந்தையும்நீ
சிந்தாகுல மானவை தீர்த்தெனையாள்
கந்தா கதிர்வேலவனே உமையாள்
மைந்தா குமரா மறைநாயகனே.

47 ஆறாறையுநீத் ததன்மேல் நிலையைப்
பேறா அடியேன் பெறுமா றுளதோ
சீறா வருசூர் சிதைவித் திமையோர்
கூறா உலகம் குளிர்வித் தவனே.

48 அறிவொன் றறநின் றறிவார் அறிவிற்
பிறிவொன் றறநின்ற பிரானலையோ
செறிவொன் றறவந் திருளே சிதைய
வெறிவென் றவரோ டுறும்வே லவனே.

49 தன்னந் தனிநின் றதுதா னறிய
இன்னம் ஒருவர்க் கிசைவிப் பதுவோ
மின்னும் கதிர்வேல் விகிர்தா நினைவார்
இன்னம் களையும் கிருபைசூழ் சுடரே.

50 மதிகெட் டறவாடி மயங்கியறக்
கதிகெட் டவமே கெடவோ கடவேன்
நதிபுத் திரஞான சுகாதிபவத்
திதி புத்திரர் வீறடு சேவகனே.

51 உருவாய் அருவாய் உளதாய் இலதாய்
மருவாய் மலராய் மணியாய் ஒளியாய்
கருவாய் உயிராய்க் கதியாய் விதியாய்
குருவாய் வருவாய் அருள்வாய் குகனே.





## வைரவர் துதி

பரமனை மதித்திடாப் பங்க யாசனன்
ஒருதலை கிள்ளியே யொழிந்த வானவர்
குருதியு மகந்தையுங் கொண்டு தண்டமுன்
புரிதரு வடுகனைப் போற்றி செய்குவாம்.

# தாயுமான சுவாமிகள் அருளிய
# 'காண்பேனோ' என்கண்ணி

1. சிந்திக்கும் தோறும் தெவிட்டா அமுதே என்
புந்திக்குள் நீதான் பொருந்திடவும் காண்பேனோ.

2 கேவலத்தில் நான்கிடந்து கீழ்படாது இன்பவருட்
காவலன்பால் ஒன்றிக் கலந்திடவும் காண்பேனோ.

3 துரியம் கடந்தவொன்றே தூயவெளியாய் நின்ற
பெரிய நிறைவேயுனைநான் பெற்றிடவும்
காண்பேனோ

4. மாசற்ற அன்பர்நெஞ்சே மாருத பெட்டகமாத்
தேசுற்ற மாமணி நின் தேசினையும் காண்பேனோ.

5. மாயா விகார மலமகல எந்தைபிரான்
நேயானு பூதி நிலைபெறவும் காண்பேனோ.

6. பொய்புலகும் பொய்யுறவும் பொய்யுடலும்
பொய்யெனவே
மெய்ய நினை மெய்யெனவே மெய்யுடனே
காண்பேனோ

7. வாலற்ற பட்டமென மாயாமனப்படலம்
காலற்று வீழவும்முக் கண்ணுடையாய்
காண்பேனோ.

8. உள்ளும் புறம்பும் ஒருபடித்தாய் நின்று சுகம்
கொள்ளும் படிக்கிறைநீ கூட்டிடவு காண்பேனோ.

9. காட்டுகின்ற முக்கட்கரும்பே கனியே என்
ஆட்டமெல்லாம் தீரவுனதாடலையும்
காண்பேனோ

10. தூங்காமற் றூங்கிச் சுகப்பெருமான் நின்நிறைவில்
நீங்காமல் நிற்கும் நிலைபெறவும் காண்பேனே.

11. வாதவூராளிதனை வான்கருணையால் விழுங்கும்
போதவூரேறே நின் பொன்னடியும் காண்பேனே.

12. சாட்டையில்லாப் பம்பரம்போல் ஆடும் சடசால
நாட்டமற எந்தைசுத்த ஞானவெளி காண்பேனே.

13. மன்றாடும் வாழ்வே மரகதஞ்சேர் மாணிக்கக்
குன்றே நின் தாட்கீழ்க் குடிபெறவும்
காண்பேனே.

14. பொய்யென் றறிந்தும் எமைப் போக
வொட்டாதையவிந்த
வையங்களை மயக்கும் மாற்றிடவும் காண்பேனே.

15. தாயினும் நல்லதயாளுவே நின்னையுன்னித்
தீயின் மெழுகொத்துருகும் சிந்தைவரக்
காண்பேனே.

16. என்செயினும் என்பெறினும் என் இறைவா
ஏழையன் யான்
நின் செயலென்றுன்னும் நினைவுவரக் காண்பேனே.

17. எள்ளத்தனையும் இரக்கமிலாவன்பாவி
உள்ளத்தும் எந்தை உலாவிடவும் காண்பேனே.

18. வஞ்சகத்துக் காலயமாம் வல்வினையேன்
ஆகெடுவேன்
நெஞ்சகத்தில் ஐயாநீ நிலைபெறவும் காண்பேனே.

19. தொல்லைப் பிறவித் துயர்கெடவும் எந்தைபிரான்
மல்லற் கருணை வழங்கிடவும் காண்பேனே.

20. வாளாரும் கண்ணார் மயற்கடலில் ஆழ்ந்தேன்சற்
றுளாக எந்தை அருள்செயவும் காண்பேனே.

21. பஞ்சாய்ப் பறக்குநெஞ்சப் பாவியைநீ கூவியையா
அஞ்சாதே என்றின் அருள்செயவும் காண்பேனே

22. ஆடுகறங்காகி அலமந்துழன்று மனம்
வாடும் எனை ஐயா வாவெனவும் காண்பேனோ.

23. சிட்டர்க் கெளியசிவனேயோ தீவினையேன்
மட்டற்ற வாசை மயக்கறவும் காண்பேனோ.

24. உண்ணின் றுணர்த்தும் உலப்பிலா ஒன்றேநின்
தண்ணென்ற சாந்த அருள் சார்ந்திடவும்
காண்பேனோ

25. ஓடும் கருத்தொடுங்க உள்ளுணர்வு தோன்றநிலைக்
கூடும்படிக்கு இறைநீ கூட்டிடவும் காண்பேனோ.

26. வாக்கால் மனத்தால் மதிப்பரியாய் நின்னருளை
நோக்காமல் நோக்கிநிற்கும் நுண்ணறிவு
காண்பேனோ.

27. இவ்வுடம்பு நீக்குமுன்னே எந்தாய் நின்னருளாம்
அவ்வுடம்புக் குள்ளே அவதரிக்கக் காண்பேனோ.

28. நித்தமாய் ஒன்றும் நிரஞ்சனமாய் நிர்க்குணமாம்
சுத்தவெளி நீவெளியாய்த் தோன்றிடவும்
காண்பேனோ.

29. கண்ணிறைந்த மோனக்கருத்தே என்கண்ணே என்
உண்ணிறைந்த மாயை ஒழிந்திடவும் காண்பேனோ.

30. அத்தா விமலா அருளாளா ஆனந்த
சித்தா எனக்குனருள் செய்திடவும் காண்பேனோ

31. வீணே பிறந்திறந்து வேசற்றேன் ஆசையற
காணேன் இறைநின் கருணைபெறக் காண்பேனோ.

32. சட்டையொத்த இவ்வுடலைத் தள்ளுமுன்னே
நான்சகச
நிட்டையைப் பெற்றையா நிருவிகற்பம்
காண்பேனோ.

33. எல்லாந் தெரியும் இறைவாஎன் அல்லல்
எல்லாம்
சொல்லாமுன் நீதான் தொகுத்திரங்கக்
காண்பேனோ.

34 அண்ட பகிரண்டம் அனைத்தும் ஒருபடித்தாக்
கண்டவர்கள் கண்டதிருக் காட்சியையும்
காண்பேனே.

35. ஊனிருந்த காயம் உடனிருப்ப எந்தைநின்பால்
வானிருந்த தென்னவுநான் வந்திருக்கக்
காண்பேனே.

36. தினையத்தனையும் தெளிவறியாப் பாவியேன்
நினைவிற் பரம்பொருள்நீ நேர்பெறவும்
காண்பேனே.

37. துன்பமெனும் திட்டனைத்தும் சூறையிட ஐயாவே
இன்ப வெள்ளம் வந்திங் கெதிர்ப்படவும்
காண்பேனே



# நற்சிந்தனை

## கூவு குயிலே

கூவுகுயிலே பறந்து கூவுகுயிலே
கும்பிடுவார் மனத்தானைக் கூவுகுயிலே
நாவுக்கினியவனை நல்லகுயிலே
நம்பனையிங்குவரக் கூவுகுயிலே
சிவன் சிவன் என்று சொல்லும் சித்தர்குழாம்
தேடும் பொருளை வரக் கூவுகுயிலே
நாவலரும் பாவலரும் பணிந்தேத்தும்
நல்ல சிவனிங்கு வரக் கூவுகுயிலே
தேன்சொரியும் சோலையில்வாழ் தெய்வக்குயிலே
தேவாதி தேவன் வரக் கூவுகுயிலே
நான் பாடும் பாடனைத்தும் நயந்து சொல்லி
நாதனை இங்குவரக் கூவுகுயிலே
இளமையுமூப்புமில்லா எம்பிரானை
இங்கேஎனைத் தேடிவரக் கூவுகுயிலே
இளம்பிறை அணிந்த பிரானிங்கேவர
எழிலுடன் பறந்துபோய்க் கூவுகுயிலே
ஓயாமல் உள்குவார்தம் உள்ளத்தானை
உத்தமனை இங்கேவர கூவுகுயிலே

## நல்வரவு சொல்லு சிறு பல்லி

1. எல்லாம்செய வல்லபிரான் இங்குவரு மாகில்
 ஏத்துவார் மனம் வாழும் ஈசன்வரு மாகில்
கல்லார்க்கும் அருள்புரியும் கடவுள்வரு மாகில்
 களிப்புடனே நல்வரவு சொல்லுசிறு பல்லி

2. காமாதி குணமெல்லாம் கட்டவிழு மாகில்
 கருணையே வடிவான கடவுள்வரு மாகில்
தானாக எழுந்தருளுந் தானுவரு மாகில்
 சடுதியாய் நல்வரவு சொல்லுசிறு பல்லி

3. தத்துவம் ஆறாறும் வெந்துவிடு மாகில்
 தானென்ற தன்மை வந்து தலையெடுக்கு மாகில்
பத்தர்களை நீங்காத பரமன் வரு மாகில்
 பக்குவமாய் நல்வரவு சொல்லுசிறு பல்லி

4. ஒளிக்கொளியைக் கொடுக்கின்ற ஒருவன்
 வரு மாகில்
 உண்மைநிலை என்மனத்தில் மெல்லவரு மாகில்
வழியடிமை கொள்கின்ற வள்ளல் வரு மாகில்
 வருத்தமின்றி நல்வரவு சொல்லுசிறு பல்லி

5. சொல்லமுடி யாதபொருள் சொல்வரு மாகில்
 சும்மா இருக்கின்ற சுகம்கிடைக்கு மாகில்
எல்லாரும் காண வெளிப்பித்தேற்று மாகில்
 இன்னுமொருக் கால்வரவு சொல்லுசிறு பல்லி

6. தேனுந்து கொன்றையணி செல்வன் வரு மாகில்
 சிவகாமி பங்கிலுறை தெய்வம் வரு மாகில்
நானும்நீயும் ஒன்றாகி நிற்கவரு மாகில்
 நல்லகுரல் நல்வரவு சொல்லுசிறு பல்லி

7. வேதமறி யாதபொருள் விரைந்துவரு மாகில்
 மேமிவுட மெங்குமறி வாகிவரு மாகில்
நாதமுடிமேல் நடனம் நாங்காணு மாகில்
 நல்லகுரல் நல்லதிசை சொல்லுசிறு பல்லி

8. நொந்தோமென் றுடும்திருப்பாதம் வரு மாகில்
 சுரிகுழலாள் பங்கன் இங்குவரு மாகில்

வந்தோம் வந்தோமென்னும் அடிகள் வருமாகில்
வளப்பமுடன் நல்லகுரல் சொல்லு சிறு பல்லி

9. வெள்விடைமேல் உவந்தேறும் விமலன் வருமாகில்
வேதத்தினுட்பொருள் விளங்கவருமாகில்
எல்லவர்க்கும் பொதுவில்நடம் நாம் காணுமாகில்
இன்னுமொருக் காலவரவு சொல்லுசிறு பல்லி

10. பூதங்கள் ஐந்தான புனிதன்வருமாகில்
புன்னெறியிற் செல்லாத சிந்தைவருமாகில்
தாதவிழும் சடையப்பன் இங்குவருமாகில்
தண்மையுடன் நல்வரவு சொல்லுசிறு பல்லி

11. பாடல் பத்தும் படிப்போர்கள் கேட்போர்கள் எல்லாம்
பங்கமின்றி வாழ்ந்துபின் பரமனருளாலே
வீடகத்தே புகுந்திடுவார் மெய்ம்மையிதுவாகும்
விட்டுவிட்டு நல்லகுரல் சொல்லுசிறு பல்லி





இலக்கணச் சுவாமிகள்


என்னும்

ஸ்ரீமத் முத்துக்குமாரத்தப்பிரான்

அவர்கள்



அன்னையும் பிதாவும்



டாக்டர் க. சி. சண்முகரெத்தினம்

தோற்றம் : 11-12-1919

மறைவு : 30-6-1966

# க. சி. சண்முகரெத்தினம்

வண்ணை ஸ்ரீ தையல்நாயகி சமேத ஸ்ரீ வைத்தீஸ்வரப் பெருமானின் திருவருளால் இலக்கண சுவாமிகள் எனும் ஸ்ரீமுத்துக்குமாரத் தம்பிரான் அவர்கள் மரபிலே க. சி. சண்முகரெத்தினம் அவர்கள், கந்தப்பிள்ளை சிற்றம்பலத்தாருக்கும் தையல்நாயகி அம்மைக்கும் திருமகனாகப் பிறந்தார்.

யாழ்ப்பாணம், கொழும்பு, சென்னை முதலிய இடங்களிலே கல்வி பயின்று வைத்திய கலாநிதியாகி, புகழ் பெற்ற ராமுப்பிள்ளை வைத்தியரின் அடிச்சுவட்டிலே ஐந்தாவது பரம்பரையாக, வைத்தியத் தொழிலை ஓர் அறமாக நடத்தி எண்ணற்றவர்களின் நன்றியைப் பெற்றுள்ளார்.

இதுவரை ஈழத்தில் இல்லாதபடி முதல்தரமான ஆயுர்வேத சித்த மருந்துவகைகளை, நவீன மெஷின்களைக் கொண்டு கைப்படாமல் தமது மருந்துச்சாலையில் செய்து வந்துள்ளதுடன் வைத்திய ஆராய்ச்சியில் ஈடுபட்டு பலரும் போற்ற தக்க வகையில் பல அபிவிருத்திகளைச் செய்துள்ளார்.

சென்னையிலே வைத்திய மாணவராக இருக்கையில் தேசிய விடுதலைப் போரில் ஈடுபட்டு சிறைவாசமிருந்தார். இலங்கை-இந்திய நட்புச் சங்கம், ஸ்ரீ இராமகிருஷ்ண சபை இவற்றின் காரியதரிசியாயும், சூறாவளி கஷ்ட நிவாரண வேலைகளைச் செய்தும் சமூகத்தொண்டாற்றினார்.

தமது தமயனார் தங்கராஜா அவர்களுடன் சேர்ந்து 'ஈழநாடு' பத்திரிகையை முதலில் வாரப்பதிப்பாக ஆரம்பித்து விடாமுயற்சியுடனே படிப்படியாக தினசரியாக்கி வெற்றிகரமாக வளர்த்து, யாழ்ப்பாணத்துக்கும் நாட்டுக்கும் பெருந்தொண்டாற்றியுள்ளார்.

இல்லறமாகிய நல்லறத்தைச் செவ்வனே நடாத்திய டாக்டர் அவர்கள் நாற்பத்தைந்தாவது வயதிலே தம் அருமை மனைவி பர்வதவர்த்தனி அம்மையையும், மக்கள் ஐவரையும் அண்ணர் தங்கராஜாவையும் உறவினர்களையும் அன்பர்களையும் பிரிந்து ஸ்ரீ வைத்தீஸ்வரப் பெருமானின் திருவடி நீழலை அடைந்தார்கள்.

தோற்றம் : மார்கழி 11-ம் திகதி, 1919-ம் ஆண்டு

மறைவு : ஆனி 30-ம் திகதி, 1966-ம் ஆண்டு

ஈழநாடு லிமிட்டெட்,

யாழ்ப்பாணம்.